சி.சி.எண். **127/2023** அசா.**6** லதா**,** க/பெ. வெங்கடேஷ்வரன் தேதி **12.11.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். )

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சிகிச்சை அளித்த அரவிந்தன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் இரண்டு காயங்கள் உள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் அரவிந்தனின் இடது கையில் ஆழமான கிழிந்த காயமும், இடது கையில் நரம்பு அறுந்த நிலையில் இரத்தக்காயமும் காணப்பட்டது என்று கூறியுள்ளேன். மேற்படி இரண்டு காயங்கள் ஒரே காயம் என்றால் சரிதான். அரவிந்தனின் மார்பு பகுதியில் ஏற்பட்டுள்ள சிராய்ப்பு காயம் அருவாளால் வெட்டினாலோ, கத்தியால் குத்தினாலோ ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். வெங்கடாசலம் என்பவருக்கு இடது கையில் ஏற்பட்டுள்ள சிராய்ப்பு காயம் கத்தியால் தாக்குவதன் மூலம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் சிகிச்சை அளித்த வெங்கடாசலம் என்னிடம் அவரது தோள்பட்டையில் தாக்கினார்கள் என்று கூறியிருந்தால் தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் பற்றி குறிப்பாக பதிவு செய்திருப்பேன். அவ்வாறு தோள்பட்டையில் காயம் ஏற்படவில்லை என்பதால்தான் அதுபற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. நான் வெங்கடாசலத்தை பரிசோதனை செய்தபோது அவரது இடது கையில் காணப்பட்ட சிராய்ப்பு காயம் தவிர வேறு காயம் எதுவும் அவரது உடலில் காணப்படவில்லை என்றால் சரிதான். நான் சிகிச்சை அளித்த அரவிந்த் என்பவருக்கும் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள இரண்டு காயங்கள் தவிர வேறு காயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். வெங்கடாசலம் எந்த நாளில் விடுவிப்பு செய்யப்பட்டார் என்றால் 14.05.2023 அன்று விடுவிக்கப்பட்டார். வெங்கடாசலம், அரவிந்த் ஆகியோருக்கு ஏற்பட்ட சிராய்ப்பு மற்றும் கிழிந்த காயங்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது இடறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.